**IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,**

**KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL**

**A.S.No. 25/2024**

**Deposition of P.W. 1**

**Name** : பத்மாவதி

**Father's Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Dated** : **25.04.2026**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

**எனது பாட்டி பெயர் நாராயணவடிவு நாடாச்சி , எனது அம்மா பெயர் செல்லம்மாள். (8.10.1960 ஆம் தேதியிட்ட நாராயணவடிவு , செல்லம்மாள் பெயருக்கு எழுதி கொடுத்த செட்டில்மென்ட் பத்திரம் அசல் ம.சா.ஆ.1 ஆகவும், 29.1.1973 ஆம் தேதியிட்ட நாராயணவடிவு எழுதி கொடுத்த உயில் ஆவணம் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

**2 மற்றும் 3 எதிர்மனுதாரர்தரப்பு குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். 2 வது மனுதாரர் கிருஷ்ணன் என்பவர் தான் தற்போது என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால் அவர் தகவல்

சொன்னார் நான் நீதிமன்றத்திற்கு வந்தேன். நான் வழக்கின் 1 வது எதிர்மனுதாரர் என்றால் சரிதான். கிழமை நீதிமன்றங்களில் தாக்கல் செய்துள்ள பல்வேறு சிவில் வழக்குகளில் நான் 1 வது பிரதிவாதி என்றால் என்றால் சரிதான். அந்த வழக்குகளிலும் நான் எதிர்வழக்குரையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பிறந்த வருடம் 10.05.1968 ஆகும். செட்டில்மென்ட் ஆவணம் ம.சா.ஆ.1, 1960 வருடம் உடையது என்றால் சரிதான். அப்போது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர்கள் என்னுடைய அண்ணன் மற்றும் அக்கா உறவு முறை ஆவார்கள். செல்லம்மாளுக்கு நான் மற்றும் சுப்பிரமணியன் ஆகிய இரண்டு பிள்ளைகள். சுப்பிரமணியன் சொத்து என்னிடம் தான் உள்ளது. ம.சா.ஆ.1 ஆவணத்தை நான் தான் 2 ஆம் மனுதாரரிடம் ஒப்படைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய கொடுத்தேன் என்றால் சரிதான். நான் வழக்கில் ஆஜராகததால் வழக்கின் தன்மை குறித்து எனக்கு தெரியாது என்றால் தொியும். அதனை 2 ஆம் மனுதாரர் தான் எனக்கு செல்வார் என்றால் சரிதான். என்னுடைய சொத்து என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கு பிரச்சனைக்குறிய ரத்தினசாமி வாரிசுகளுக்கும், பிரதிவாதிகள் 2 மற்றும் 3 ஆகியோர்களுக்கும் உள்ளது என்றால் சரிதான். வழக்கில் 2 வது மனுதாரருக்கு வேண்டி ஆவணத்தை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் அவர்களுடைய வயோதிகத்தை பயன்படுத்தி கஷ்டம் ஏற்படுத்த வேண்டும் என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் 3 ஆம் எதிர்மனுதாரராக இருந்து வழக்கில் ஆஜராகமால் 2 வது மனுதாரருக்கு ஆவணங்களை கொடுத்து மனுதாரருக்கு சாதகமான ஒரு தலைபட்ச சாட்சியாக வந்துள்ளேன் என்றால் சரியல்ல. 3 வது எதிர்மனுதாரருக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். அதனால் அவருடைய வயோதிகத்தை பயன்படுத்தி சொத்தை அபகரிக்க வேண்டும் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில்

இருந்து அழைப்பாணை வராமல் 2 வது மனுதாரருடன் நீதிமன்றத்திற்கு வந்து எனக்கு தகுதியில்லாத ஆவணத்தை தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.